தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 075/ந/2021

நாள். 06.12.2021

திரு.க.கருத்தபாண்டியன்,
சங்கரன்கோவில் – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி,
சங்கரன்கோவில். – எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், திருவிக புது தெரு, 38/15 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.க.கருத்தபாண்டியன் அவர்களின் 23.08.2021 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.08.2021 அன்று பெறப்பட்டு, 75/2021 எண்ணிட்ட முறையீட்டு எண்ணாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரது மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், சங்கரன்கோவில் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் அவரது அறிக்கை ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், திருவிக புது தெரு, 38/15 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.க.கருத்தபாண்டியன் அவர்கள் தன்னுடைய புகார் மனுவில் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் தெற்கு சங்கரன்கோவில், சாந்தி நகர் பகுதியையும் நகராட்சியின் திருவிக தெப்பகுளம் பகுதியையும் இணைக்கும் பகுதியில் அமைந்துள்ள பாலம் 1928 ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்றும், அது பழுதடைந்துள்ளதால் அதனை செப்பனிட்டு தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். முறையீட்டு மனுதாரர் திரு.க.கருத்தப்பாண்டியன் அவர்கள் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளருக்கு சங்கரன்கோவில் மற்றும் தெற்கு சங்கரன்கோவிலை (ஒடை தெரு வழியாக) இணைக்கும் பாலத்தை சரிசெய்ய வேண்டி புகார் மனு ஒன்று கொடுத்து மேற்காணும் பாலம் கட்டி, தோராயமாக 100 வருடங்களாகி விட்டதாலும் பழுதடைந்த பாலத்தை தினமும் 2000-க்கும் அதிகமான விவசாயிகள் மற்றும் சாந்தி நகர் மக்களும் உபயோகப்படுத்தும்போது அடிக்கடி

விபத்து நடக்கிறது என்ற காரணத்தாலும் அந்த பாலத்தை பரிசோதித்து அதனை சரிசெய்து அல்லது புதிய பாலம் அமைத்து தரும்படி கேட்டு இருந்ததாக தெரிவித்துள்ளார்.

2. மேலும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையினரின் அரசாணை எண்.114-ன்படி மனுதாரர் அனுப்பும் புகாரின் மீது அதிகபட்சம் 60 தினங்களுக்குள் நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க 60 தினத்திற்கு மேல் ஆகும் என்றால் இடைக்கால பதிலும், எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையும் மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். கோரிக்கை நிராகரிக்கப்பட்டாலும் அதற்கான காரணத்தை எழுத்து மூலம் 60 தினங்களுக்குள் மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். ஆனால் புகார் மனு கொடுத்து 2 மாதங்களுக்கு மேல் ஆகியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை; எந்த தகவலும் மனுதாரராகிய தனக்கு தெரிவிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

3. பாலம் சம்பந்தமாக தகவல் பெறும் உரிமை சட்டம் மூலம் பெறப்பட்ட தகவலின் படி இந்த பாலத்தை பற்றிய எந்தவிதமான தகவலும் பாதுகாக்கவில்லை என்பதும் இதுவரை இந்த பாலத்தின் ஸ்திரத்தன்மையை அல்லது மக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவானதாக உள்ளதா என்று கடந்த 100 வருடங்களில் ஒரு முறைகூட பரிசோதிக்கவில்லை என்பது நிரூப்ணமாகிறது. சங்கரன்கோவில் தெற்கு ரதவீதியில் ஆரம்பித்து தெற்கு சங்கரன்கோவில் எல்லை வரை ஓடை தெரு உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் இந்த ஓடை தெருவில் பழைய சிமெண்ட் சாலையை எடுத்துவிட்டு புதிய தார் சாலை போடப்பட்டது. அந்த தார் சாலையை இந்த புகாரில் சம்பந்தப்பட்ட பாலத்துடன் இணைத்துள்ளனர். பாதி தார் சாலை பாலத்திற்கும், மீதி பாதி சாலை ஓடையில் சென்று மக்கள் விழுந்து தங்கள் உயிரை போக்கிக்கொள்வதற்கு ஏதுவாக சாலை அமைத்துள்ளனர். இந்த தார் சாலை ஒப்பந்தத்தை நகராட்சி நிர்வாகம் எவ்வாறு ஒப்புதல் அளித்தது என்று தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

4. மேற்காணும் புகார்களை தெரிவித்த மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் முன் கீழ்க்காணும் கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளார்:-

- மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் முன் சங்கரன்கோவில் மற்றும் தெற்கு சங்கரன்கோவிலை (ஓடை தெரு வழியாக) இணைக்கும் பாலத்தை உடனடியாக மக்கள் பயன்பாட்டில் இருந்து மூட வேண்டும்.

- இந்தப்பாலத்தை மூடும் முன் சங்கரன்கோவில் திருநெல்வேலி சாலையில் இருந்து சாந்தி நகரை இணைக்கும் விதமாக தற்காலிக பாலம் அமைத்து தரவேண்டும். 100 வருடங்களாகிய பாலத்தை சரிசெய்யும் வரை இந்த தற்காலிக பாலத்தை உபயோகப்படுத்த மக்களை அனுமதிக்க வேண்டும்.

- மக்கள் சார்பாக கொடுத்த புகாரின் மீது இதுவரை எந்த நடவடிக்கை எடுக்காமலும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையினரின் அரசாணையை கடைப்பிடிக்காமலும் இருந்ததற்கு என்ன காரணம் என்று நகராட்சி நிர்வாகம் விளக்கம் அளிக்க வேண்டும்.

- சங்கரன்கோவில் தெற்கு ரதவீதியில் ஆரம்பித்து தெற்கு சங்கரன்கோவில் எல்லை வரை உள்ள ஓடை தெரு சாலை போட திட்டம் தீட்டியபோது என்ன

காரணத்திற்காக ஓடை தெருவின் கடைசியில் உள்ள பாலத்தை புறக்கணித்தது ஏன் என்ற விபரத்தை நகராட்சி நிர்வாகம் அளிக்க வேண்டும்.

- இந்த புகாரில் குறிப்பிட்ட பாலம் பழுதடைந்து உள்ளது என்று கருதும்பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு விசாரணைக்கு வரும் முன் தற்காலிக பாலம் எத்தனை நாட்களில் மக்களுக்கு அமைத்து தரப்படும் என்ற திட்ட விபரத்தினை தர வேண்டும்.

- இந்த புகாரில் குறிப்பிட்ட பாலம் பழுதடைந்து உள்ளது என்று கருதும் பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு விசாரணைக்கு வரும் முன் இந்த புகாரில் குறிப்பிட்ட பாலத்தை சரிசெய்ய முடியுமா அல்லது புது பாலம் அமைக்க வேண்டுமா என்ற விபரத்தினை கள ஆய்வு செய்து களஆய்வு ரிப்போர்ட்டை நகராட்சி நிர்வாகம் சமர்ப்பிக்கவேண்டும்.

மேலே குறிப்பிட்ட அனைத்து கோரிக்கைகளையும் சங்கரன்கோவில் நகராட்சி நிர்வாகம் நிறைவேற்றிட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் தகுந்த விசாரணை செய்து மக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் முன் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

5. இம்முறைமன்றத்தின் 03.11.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரர் திரு.க.கருத்தப்பாண்டியன் மற்றும் எதிர்மனுதாரர் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையர் ஆகியோர் 12.11.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. 12.11.2021 அன்று விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் திரு.க.கருத்தப்பாண்டியன் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

சங்கரன்கோவில் சாந்தி நகர், திருவிக நகர் தெப்பகுளம் பகுதியில் உள்ள பாலம் பழுதடைந்துள்ளதால், அப்பாலத்தை சரிசெய்ய அப்பாலம் யாருக்கு சொந்தமானது என விவரம் கோரியபோது, அதன் விவரத்தை நகராட்சி அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் தர மறுப்பதால், அப்பாலம் தொடர்பான விவரத்தை நகராட்சி அலுவலர்கள் தனக்கு அளிக்க கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், அப்பாலம் நகராட்சியை சார்ந்ததாக இருந்தால், அதனை சரி செய்திட நகராட்சிக்கு ஆணையிடுமாறும், மேற்கண்ட பாலத்திற்கு அருகில் செல்லும் சாலையும் பழுதடைந்துள்ளதால், அதனையும் சரி செய்திட இம்முறைமன்றத்தை வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அன்றைய தினமே நடைபெற்ற விசாரணையில் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையர் கீழ்க்காணுமாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:

சங்கரன்கோவிலைச் சேர்ந்த திரு. கருத்தபாண்டியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் அளித்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள பாலம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் தெற்கு சங்கரன்கோவில் சாந்தி நகர் பகுதியையும் சங்கரன்கோவில் நகராட்சியின் திருவிக நகர் தெப்பகுளம் பகுதியையும் இணைக்கும் பகுதியில் உள்ளது. 1928 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இப்பாலம் தற்போது வரை ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் இருந்து வருகிறது என்கின்ற விவரத்தையும் மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இணைப்பு சாலையும் சங்கரன்கோவில் நகராட்சியைச் சார்ந்ததல்ல என்றும் தெரிவித்துள்ளார். மேலும் விசாரணையின் போது தன்னுடைய 12.11.2021 நாளிட்ட அறிக்கையும் சமர்ப்பித்துள்ளார்.

6. எனவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் சங்கரன்கோவில் நகராட்சிக்கு பாத்தியப்படாத மற்றும் பராமரிப்பில் இல்லாத பாலத்தை மனுதாரரோ அல்லது சாந்தி நகர் பகுதி வாழ்மக்களோ அவர்களின் சொந்த செலவில் புதிதாக பாலம் கட்டவோ அல்லது பராமரிப்பு செய்யவோ சங்கரன்கோவில் நகராட்சியின் வரம்பிற்கு அப்பாற்பட்டு அனுமதி வழங்க இயலாது என்றும் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்படி விபரத்தை சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் தெற்கு சங்கரன்கோவில் சாந்தி நகர் பகுதியையும் சங்கரன்கோவில் நகராட்சியின் திருவிக நகர் தெப்பகுளம் பகுதியையும் இணைக்கும் பகுதியாக உள்ளதால் இப்பாலம் தொடர்பாக சங்கரன்கோவில் நகராட்சி நில அளவர் மாறுபட்ட கருத்து தெரிவித்து இருந்ததால் அது தொடர்பான ஆவணங்களை சரிபார்த்து தற்போது சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு பாத்தியப்பட்டது என அறிக்கை பெறப்பட்டுள்ளது என்ற விபரத்தையும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

7. இந்நேர்வில் மனுதாரர் புகாரில் தெரிவித்த சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் தெற்கு சங்கரன்கோவில், சாந்தி நகர் பகுதியையும் சங்கரன்கோவில் நகராட்சியின் திருவிக நகர் தெப்பகுளம் பகுதியையும் இணைக்கும் பாலமானது, தற்போது ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் இருந்து வருவது ஆணையர் அறிக்கையிலிருந்து தெளிவாக தெரிகிறது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் பிரிவு 2, உட்பிரிவு (7)ன் படி உள்ளாட்சி அமைப்பு என்பதற்கான பொருளில் ஊராட்சி மன்றம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனுவின் மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது என்பதால் இம்மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துகொள்ள முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதுகுறித்து மனுதாரர், மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி கோரிக்கை வைக்கலாம்.

2021 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 06-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு.க.கருத்தபாண்டியன்,
   13/15, திருவிக புது தெரு,
   சங்கரன்கோவில் – 627 756,
   தென்காசி மாவட்டம்.

2. ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி,
தென்காசி மாவட்டம் - 627 756.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

நகல்:

முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
உதவி பதிவாளர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.